Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Vol. 69 | அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர்; ...என்னைத் தப்புவிக்கிறீர். சங்.18:48 | மே 2023 | No.5

அந்த ஒரு விதை

The one Seed

Aggie Hurst

1921-ம் ஆண்டில் டேவிட் மற்றும் ஸ்வியாஃப்லட் என்ற மிஷனெறி தம்பதியர் தங்களது இரண்டு வயது மகனோடு ஸ்வீடனிலிருந்து பெல்ஜியம் காங்கோ என்று அழைக்கப்பட்ட ஆப்ரிக் காவின் நடுப்பகுதிக்குச் சென்றனர். இன்னொரு ஸ்கான்டிநேவியா இளந் தம்பதியரான எரிக்ஸன்களை சந்தித்து தேவனுடைய நடத்துதலுக்காகக் காத் திருந்தனர். உருக்கமும் பயபக்தியும் தியாகமும் நிறைந்த அவர்கள் முக்கிய பணித்தளத்திலிருந்து ஓரமான பகுதிக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல நடத்தப் பட்டனர்.

அது விசுவாசத்தின் மிகப் பெரிய படியாயிருந்தது. என்டோலெரா என்ற கிராமத் தலைவன் இவர்கள் மக்களை ஸ்தல தெய்வங்களை விட்டு விலகச் செய்து விடுவார்கள் என பயந்து பட்டணத்திற்குள் பிரவேசிக்க விட வில்லை. மலைச்சரிவில் சுமார் 1/2 மைல் தூரம் சென்ற அவர்கள் மண் குடிசை களைக் கட்டினர்.

ஒரு ஆவிக்குரிய வல்லமைக்காக அவர்கள் ஜெபித்தும் பயனில்லை. யாரோடும் தொடர்பும் ஏற்படுத்த முடியவில்லை. ஒரு சிறுவன் மட்டும் அவர்களுக்கு ஒரு வாரத்தில் இருமுறை முட்டைகளும் கோழிகளும் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தான். ஸ்வியாப்ஃப்லட் ஒரு சிறு உருவமுடை யவள். அவளது உயரம் நான்கடி எட்டு இஞ்சுகள் மட்டுமே. ஆனால் அவள் பேசக்கூடிய ஒரே ஆப்ரிக்கன் அச்சிறுவன் மட்டுமேயானால் அவனை ஆண்டவருக்கு நேராக வழிநடத்த வேண்டுமென்று தீர்மானித்து வெற்றியும் பெற்றாள்.

எனினும் வேறு ஆதரவுகளில்லா திருந்தது. மலேரியா நோய் ஒவ்வொரு வரையும் தாக்கியது. எரிக்ஸன் தம்பதி யினர் போதுமான பாடுகளால் மத்திய மிஷன் நிலையத்திற்குத் திரும்பி சென்றனர். ஆனால் டேவிட்டும் ஸ்வியாவும் என்டொலெராவில் தங்கி பணியைத் தொடர்ந்தனர்.

அந்த வனாந்தரத்தில் ஸ்வியா கர்ப்பவதியானாள். பேறு காலத்தில் கிராமத் தலைவன் ஒரு மருத்து வச்சியை அனுமதித்தான். பிறந்த பெண் குழந்தைக்கு எய்னா எனப் பெயரிட்டனர்.

பிரசவம் மிகவும் சிக்கலாயிருந்த தாலும் ஏற்கெனவே ஸ்வியா பலவீனமா யிருந்தபடியாலும் 17 நாட்களில் அவள் மரித்துப் போனாள்.

டேவிட் ஒரு கல்லறையைத் தோண்டி தனது 27 வயதான மனை வியை அதில் அடக்கம் பண்ணி விட்டு பிள்ளைகளை மிஷன் நிலையத்திற்குக் கொண்டு சென்றார். புதிதாகப் பிறந்த பெண் குழந்தையை எரிக்ஸன் தம்பதி களிடம் கொடுத்து விட்டு, "நான் திரும்ப ஸ்வீடன் செல்லுகிறேன். எனது மனை வியை இழந்து விட்டேன். இந்தக் குழந்தையை நான் பராமரிக்க முடியாது. தேவன் என்னை அழித்து விட்டார்" என்று கூறி விட்டு தமது அழைப்பையும் தேவனையும் விட்டு விட்டு துறைமுகத் திற்கு நேராகச் சென்றார்.

எட்டு மாதங்களில் எரிக்ஸன் தம்பதியினரும் பயங்கரமான வியாதி யால் மரித்து விட்டனர். குழந்தை அமெரிக்க மிஷனெறிகளிடம் ஒப்படைக் கப்பட்டது. அவர்கள் அதற்கு அக்கி என்ற ஸ்வீடன் பெயரையிட்டு அவளது மூன்று வயதில் ஐக்கிய நாட்டிற்குக் கொண்டு வந்தனர்.

இந்தக் குடும்பம் குழந்தையை அதிகமாக நேசித்தது. ஆப்ரிக்காவுக்குத் திரும்ப வந்தால் சட்ட பூர்வ நடவடிக் கைகளால் குழந்தையைப் பிரிய வேண்டி யதாயிருக்கும் என்று எண்ணிய அவர்கள் மிஷனெறி பணியினை விட்டு விட்டு, போதகப் பணியில் ஈடுபட்டனர். எனவே அக்கி தென் டகோட்டாவில் வளர்ந் தாள். ஒரு வேதாகமப் பள்ளியில் பயின்று விட்டு டிவேய் ஹஸ்ட் என்ப வரைத் திருமணம் செய்தாள்.

இருவரும் கனியுள்ள ஊழியம் செய்தனர். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பின்பு ஒரு ஆண் குழந்தையும் பிறந்தன. கணவனார் ஒரு கிறிஸ்தவக் கல்லூரியின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

ஒரு நாள் தனது தபால் பெட்டியில் ஒரு ஸ்வீடன் கிறிஸ்தவ மாத இதழைக் கண்டாள். அதை யார் அனுப்பியது என்று தெரியாது. அதன் எழுத்துக்களையும் வாசிப்பது கடினமா யிருந்தது. அங்கு காணப்பட்ட ஒரு போட்டோ அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஒரு கல்லறையும் அதில் வெண் சிலுவையும் அதன் மீது ஸ்வியாஃ பிளட் என்ற பெயரும் இருந்தன.

அக்கி உடனே வாகனத்தில் ஏறி கல்லூரி சென்று அங்கிருந்த ஆசிரியர் களிடம் அதனை மொழி பெயர்த்துக் கொடுக்கும்படி கூறினாள். அதன் சுருக்கம் இவ்வாறாயிருந்தது. "பல காலங்களுக்கு முன்னால் என்டோ லெராவுக்கு வந்த மிஷனெறி குடும் பத்தில் வெள்ளைக்கார குழந்தை பிறந்தது. அம்மா மரித்துப் போனார்கள். ஒரு ஆப்ரிக்க சிறுவன் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தப்பட்டான். வெள்ளையர் கள் வெளியேறிய பின்பு அச்சிறுவன் வளர்ந்து ஊர்த்தலைவரிடம் தான் ஒரு பள்ளியை அந்த கிராமத்தில் கட்ட அனுமதி பெற்றான். அங்கு வந்த மாணவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக் குள் ஆதாயப்படுத்தப்பட்டனர். அவர் கள் தங்கள் பெற்றோரை ஆதாயப்படுத் தினர். கிராமத் தலைவரும் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார். அந்த கிராமத்தில் இப்போது 600 கிறிஸ்தவ விசுவாசி களுண்டு. இவையெல்லாம் டேவிட் மற்றும் ஸ்வியா தம்பதியால் ஏற்பட்டது".

மறுபடியும் இணைதல்

ஹஸ்ட் தம்பதியரின் 25-வது திருமண ஆண்டு விழாவில் கல்லூரி அவர்கள் ஸ்வீடன் செல்ல வசதி செய்தது. அங்கே அக்கி தனது உண்மையான தந்தையைக் கண்டு பிடிக்க முயற்சித் தார். டேவிட்ஃப்லட் இப்போது வயது சென்றவராயிருந்தார். அவர் மறுமணம் செய்து நான்கு பிள்ளைகளுடனிருந்தார். வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பால் மதுவுக்கு அடிமையாகிவிட்டார். தேவன் எல்லாவற்றையும் அவரிடமிருந்து எடுத்துக் கொண்டபடியால் தேவனு டைய பெயரைக் கூறக் கூடாது என்பது அவரது சட்டம்.

அக்கி தன் சகோதர சகோதரி களை உணர்ச்சி வசத்தோடு சந்தித்தாள். பின்பு தகப்பனாரை சந்திக்க விரும்பி னாள். எல்லாரும் திகைத்தனர். அவரிடம் பேசலாம் ஆனால் தேவனுடைய பெயரைக் கூறினால் அவர் ஆவேசமடை வார் என்றனர்.

மது பாட்டில்கள் சிதறிக் கிடந்த அறையில் சுருண்டு கிடந்த மெத்தையில் படுத்திருந்த 73 வயதான தந்தையை

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன் யோபு 42: 2.

மார்ச் மாத உபவாச ஜெபம் வேலூர் மாவட்டம் மலைக்கோடி என்ற ஊரில், செயின்ட் ஜான்ஸ் சர்ச்சில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த ஜெபம் கடந்த வருடம் (08.01.2022) ஜனவரி மாதம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த நாளிலிருந்து அனேக இடையூறுகள் ஏற்பட்டது. கோவிட்டால் ஏற்பட்ட அரசாங்க ஒழுங்குகளால் நடத்த முடியாமல் போனது. இம்முறை (11.03.2023) எல்லா ஒழுங்குகளையும் செய்து முடித்தபின் போதகர் பிரகாஷ் மலேஷியா ஊழியங்களுக்கு சென்று பெலவீனத்தோடு திரும்பியபடியால் வர இயலாத நிலை ஏற்பட்டது. சகோ. கிப்சன் சாமுவேல் குஜராத்திலிருந்து விமானம் மூலம் சென்னை வந்து, வேலூர் வர டிக்கெட் பதிவு செய்திருந்தார்கள். ஆனால் குஜராத்தில் ஊழிய களங்களை பார்வையிட்டு ஊழியம் செய்ய ஓர் ஊழியர் வந்து ஒரு வாரமாய் தங்கினபடியால் வர முடியவில்லை. உபவாச ஜெபம் முடிந்த பிற்பாடு திரும்பி வர சனிக்கிழமை சரியான ரயில் இல்லாதபடியால் சென்னை சென்று மறுநாள் அழைப்பின் எதிரொலி சபையின் ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்று நாகர்கோவில் திரும்ப ஒழுங்கு செய்தோம். சென்னை செல்ல எல்லா ஒழுங்குகளையும் செய்தபின் ஜெபத்திற்கு இரு தினங்கள் முன்புவரை சென்னை போதகரை தொடர்பு கொள்ள முடியவில்லை. ஆராதனை நடத்த வேண்டியவர் இல்லை, கீ போர்டு வாசிக்க ஆள் இல்லை, NIMS ஜெபம் நடத்த வேண்டியவர் இல்லை, ரெவ. துரைசிங் அவர்களுக்கு மாலை 5 மணிக்கு தர்மபுரியில் ஊழியம் இருந்தபடியால் 1.00 மணிக்கு கிளம்ப வேண்டும். இப்படி இல்லை, இல்லை என்கிற பிரதிகூலமான சுழ்நிலையில் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்பு கொடுத்து பிரயாணத்தை தொடங்கினோம்.

சரியான பிரயாண வசதியில்லாதபடியால் 10ம் தேதி வெள்ளி காலை 6.15 மணிக்கு காட்பாடி வழியாக மும்பை செல்லும் ரயில் மூலம் புறப்பட்டு மாலை 7.45 மணிக்கு காட்பாடி போய் சேர்ந்தோம். அங்கிருந்து பேருந்து மூலம் துரப்பாடி போனோம். அங்கிருந்து உபவாச ஜெபம் ஒழுங்கு செய்ய உதவியாயிருந்த டாக்டர் **சேம்தாஸ்** கார் மூலம் அரியூரில் அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்று இரவு உணவு வழங்கினார்கள். பின்பு சபையின் ஊழியர் சகோ. **சகரியா** அங்கு வந்து எங்களை விசாரித்து சிலரை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்று தங்க வைத்தார். மறுநாள் சரியாக 10.00 மணிக்கு சபை போதகர் ஜெபித்து உபவாச ஜெபம் ஆரம்பமானது. போதகர் பிரகாஷ் வர முடியாத காரணத்தால் பாடல் ஆராதனையை நானும் போதகர் அற்புதராஜ்ம் நடத்தினோம். தரிசன பாடல் பாடிய பின்பு 11.45 மணி வரை தரிசன செய்தி **சகோதரர் வெஸ்லி தேவதாசன்** கொடுத்தார்கள். தொடர்ந்து **ரெவ. துரைசிங்** (Zonal secretary, IEM, Madurai) தங்கள் பகுதியை நடத்திவிட்டு 12.45 மணிக்கு தர்மபுரி புறப்பட்டார்கள். 12.45-1.30 சிறப்பு செய்தி, 1.30 முதல் 02.30 வரை **போதகர் அற்புதராஜ் (நிம்ஸ் சபை, சுந்தர பாண்டியம்)**, எழுப்புதலுக்கான ஜெபத்தை நடத்தினார்கள். தேனீர் இடைவேளையை தொடர்ந்து **சகோதரி கிறிஸ்டி சாமுவேல்** நமது பிரதமரின் மாநிலமாகிய குஜராத்தின் அவல நிலைமை, அம்மக்களின் தேவை மற்றும் நிம்ஸ் ஸ்தாபனம் அங்கு செய்யும் பணி குறித்து பகிர்ந்து கொண்டார்கள். 3.45 முதல் 4.45 வரை நிறைவு செய்தி **சகோதரர் வெஸ்லி தேவதாசன்** கொடுத்தார்கள். 4.45 முதல் 5.00 வரை விசேஷ ஜெபம் மலைக்கோடி சபைக்காக, போதகருக்காக, விசுவாசிகளுக்காக மற்றும் வேலூர் மாவட்டத்திற்காக போதகர் அற்புதராஜ் நடத்தினார்கள். நிறைவாக சபை ஊழியர் உபவாச ஜெபம் நடத்த உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறி ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள்.

விசுவாசிகள் கலந்து கொண்டு வாஞ்சையோடு ஜெபித்தார்கள். சில அருகிலுள்ள சபை ஊழியர்களும் வந்திருந்தனர். சிறிய சபையாக இருந்தாலும் வந்த விசுவாசிகள் இடைவேளையிலும், ஜெபம் முடிந்த பின்பும் எழும்பாமல் இருந்தது ஆச்சரியமாக இருந்தது. சபையை ஜெபத்திற்கு திறந்து கொடுத்து, அனைத்து ஒழுங்குகளையும் செய்த சபை **ஊழியர் சகரியா** குடும்பம், எல்லா காரியங்களிலும் பின்நின்று உதவி செய்த **டாக்டர் சேம்தாஸ்** குடும்பம், **சகோ. ரூபன்**, விசுவாசிகள் மற்றும் உதவி செய்த யாவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். கர்த்தர் தாமே யாவரையும் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக.

தொடர்ந்து மாலை 7.25 சகாப்தி ரயில் மூலம் 9.30 மணிக்கு சென்னை சென்று **அழைப்பின் எதிரொலி** சபையில் இரவு தங்கி மறுநாள் ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்றோம். சகோதரர் வெஸ்லி தேவதாசன் 8 & 10 மணி இரண்டு ஆராதனையிலும் பேதுருவின் 7 காரியங்கள் குறித்து செய்தி கொடுத்தார்கள். மாலை கன்னியாகுமரி விரைவு ரயில் மூலம் புறப்பட்டு மறுநாள் காலை 5.30 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.

மேலும் 7 மணி நேர உபவாச ஜெப ஊழியங்களை ஜெபத்தினாலும், உதாரத்துவமான தியாக காணிக்கைகளினாலும் தாங்கின யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. இவ்வருடத்திற்கான மீதியான மாதங்களுக்கு இடங்கள் ஒழுங்காக ஜெபித்து கொள்ளுங்கள்.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

கிறிஸ்துவுக்குள்,
W. சாமுவேல் பின்னி

2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும் கிடக்கும் நமது தேச மக்களின் அவல நிலை நம்மை உலுக்காத பட்சத்தில் எழுப்புதல் வராது.

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

நெருங்கினாள். 'பப்பா' என்று மெல்லிய குரலில் அழைத்தாள். அவர் திரும்பிக் கொண்டு அழத் தொடங்கினார். 'அய்னா நான் உன்னைக் கொடுத்துவிட நினைக்கவில்லை' என்றார். 'பரவாயில்லை', எனக்கூறிய அவள் தனது கரத்தால் அவரை அணைத்துக் கொண்டு, 'தேவன் என்னைக் கவனித்துக் கொண்டார்' என்றாள். தந்தைக்கு அது பிடிக்கவில்லை. "தேவன் நம் அனைவரையும் மறந்து விட்டார். அவரால்தான் நமது வாழ்வு இப்படியாகிவிட்டது" என்று கூறி சுவர்ப் புறமாகத் திரும்பிக் கொண்டார்.

அக்கி அவரது முகத்தைத் தடவிக் கொண்டே பப்பா நான் சொல்லும் சிறிய கதையைக் கேளுங்கள்:- "நீங்கள் ஆப்ரிக்காவுக்கு வீணாகச் செல்லவில்லை. அம்மா இறந்ததும் வீணாகவில்லை. நீங்கள் ஆதாயம் செய்த சிறுவன் அந்த கிராமம் முழுவதையும் ஆண்டவருக்காக ஆதாயம் செய்தான். நீங்கள் விதைத்த ஒரு விதை வளர்ந்து கொண்டேயிருக் கிறது. அங்கு இன்று 600 ஆப்ரிக்க மக்கள் ஆண்டவரை சேவிக்கிறார்கள். நீங்கள் உங்கள் வாழ்வில் தேவனுடைய அழைப் புக்கு உண்மையாயிருந்தீர்கள். பப்பா, இயேசு உங்களை நேசிக்கிறார், அவர் ஒரு போதும் உங்களை வெறுக்கவில்லை" என்று கூறி முடித்தாள்.

தந்தை மகளின் கண்களை நோக்கினார். அவரது உடல் தளர்ந்தது. பேசத் தொடங்கினார், பிற்பகலில் பல ஆண்டுகளாக விட்டு வைத்த தேவனை அண்டிக் கொண்டார்.

சில நாட்கள் அப்பாவும் மகளும் சந்தோஷமாக சமயங்களைச் செலவு செய்தனர். அக்கியும் கணவரும் சில வாரங்களில் அமெரிக்கா செல்ல வேண்டி யதாயிருந்தது. டேவிட்ஃப்ளட்டும் சில நாட்களில் மரித்துப் போனார்.

சில வருடங்களுக்கு அப்பால் ஹஸ்ட் தம்பதியினர் லண்டனில் ஒரு உயர்தர மாநாட்டில் பங்கு கொண் டனர். அங்கு பெல்ஜியம் காங்கோ (Zaire) வின் ஒரு அறிக்கை வாசிக்கப்பட்டது. தேசிய சபைகளின் உயர் அதிகாரி இனிமையாகப் பேசினார். 110,000 ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளுக்கு பிரதிநிதித்துவம் வகித்த அவர் தமது தேசத்தில் சுவிசேஷம் பரவிய விதத்தைக் கூறினார்.

கூட்டம் முடிந்த பின்பு அக்கி அவரிடம் டேவிட்டையும் ஸ்வியா ஃப்ளட்டையும் தெரியுமா என்று கேட்ட போது அவர் "ஸ்வியாஃலட்தான் என்னை இயேசுவிடம் வழி நடத்தினார் என்றார். தொடர்ந்து நான் தான் நீங்கள் பிறப்பதற்கு முன் அவர்களுக்கு உணவு கொண்டு கொடுத்தேன். இன்று உங்கள் தாயார் கல்லறையிலிருந்தாலும், அவர் களது ஞாபகம் எங்கள் அனைவராலும் கனப்படுத்தப்படுகிறது" என்றார்.

கண்ணீரோடு அவர் அவளைத் தழுவிக் கொண்டு, 'நீங்கள் எப்படியும் ஆப்ரிக்கா வந்து, பார்க்க வேண்டும். ஏனெனில் உங்கள் தாயார் தான் எங்கள் வரலாற்றிலேயே பிரபலமானவர்கள்' என்றார்.

ஏற்ற வேளையில் அக்கியும் கணவனும் ஆப்ரிக்கா சென்றனர். திரள் கூட்டமான மக்களால் அவர்கள் வரவேற் கப்பட்டனர். மலைப்பாதையில் தன்னைத் தொட்டிலில் சுமப்பதற்காகத் தந்தை யார் பணியமர்த்தியிருந்த மனிதரையும் அவள் கண்டாள்.

மிகவும் உணர்ச்சி பூர்வமான நிகழ்வு போதகர் அக்கியை தனது தாயாரின் கல்லறையில் வைக்கப் பட்டிருந்த வெண்சிலுவையைப் பார்க்க அழைத்துச் சென்றதாகும். அவர் தரையில் முழங்காலூன்றி கர்த்தரைத் துதித்தாள். பின்பு சபையில் போதகர் யோவான். 12:24 மற்றும் சங்.126:5 ஆகிய வசனங்களை வாசித்து ஜெபித்தார்.

பிளவற்ற அர்ப்பணம்

Undivided consecration

Andrew Murray (1828-1917)

"ஆனாலும் ஈத்தாய் ராஜாவுக்குப் பிரதியுத்தரமாக: ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ, அங்கே உமது அடியானும் செத்தாலும் பிழைத் தாலும் இருப்பான் என்று கர்த்தருடைய ஜீவனையும் ராஜாவாகிய என் ஆண்டவ னுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றான்" 2 சாமு.15:21.

"அப்படியே உங்களில் எவனா கிலும் தனக்கு உண்டானவைகளை யெல்லாம் வெறுத்து விடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்க மாட் டான்" லூக்.14:33.

"ஆகையால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய், அசுத்தமானதைத் தொடா திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப் பேன். நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" 2 கொரி.6:17-18.

"அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற் றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண் டிருக்கிறேன்" பிலிப்.3:8.

ஆண்டவருக்கு நம்மை அர்ப் பணிப்பது கிறிஸ்தவனுக்கு ஆழமும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான புது வாழ்வைத் தருகிறது. எனவே இந்த வாழ்வு முற்றிலும் பிளவற்ற அர்ப்பணம் நிறைந்த ஆண்டவருக்காகவே வாழுகிற வாழ்வு என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒரு ஆலயம் அர்ப்பணிக்கப் படும் போது அது தேவனைத் தொழுது கொள்ள மாத்திரமே பயன்படுத்தப் படுவது போன்றதே இதுவும். பலி பீடத்தில் வைக்கப்பட்ட பலிப் பொருள் அவரது கட்டளைப்படியே பங்கிடப் படுவது போலவே நமது அர்ப்பணிப் பிலும் பிளவும் இருக்கலாகாது. தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர்களைத் தமது சொந்த ஜனமாக மீட்டுக் கொண்ட தாக தொடர்ந்து ஞாபகப்படுத்தினார். இதன் கருத்துக்களை சிந்திப்போம்.

இயேசுவோடு தனிப்பட்ட சார்பும் மற்றும் தனியறை ஐக்கியமுமிருக்கும்:-

அவர் ஒருவரே நேசராகவும், ஆசையாகவும் சந்தோஷமாகவும் நமது ஆத்துமாக்களுக்கு இருக்க வேண்டும், அவர் அப்படியே இருப்பார். இயேசுவின் சேவையில் அவரை நமது நண்பராக, அரசராக, நமது மீட்பராக மற்றும் தேவனாக எண்ணி முதலாவது நம்மை அர்ப்பணித்து அவரது சேவையில் ஈடுபட வேண்டும். அவரோடுள்ள தனிப் பட்ட உறுதியான அன்பின் ஆவிக்குரிய தூண்டுதல் ஒன்றே நமது வாழ்வை முற்றிலும் அர்ப்பணிக்கும் நிலையை அளிக்கும். இயேசு, 'எனக்காக' 'என்னைப் பின்பற்றுங்கள்' 'என் சீஷர்கள்' என்ற பதங்களை அடிக்கடி பயன்படுத்தினார். அவரே மையமாக இருக்க வேண்டும். அவர் தம்மையே கொடுத்தாரே. எனவே சீஷர்கள் அவரை அடைந்து கொள்வதும், அவரை நேசிப்பதும் அவரையே சார்ந்து கொள்வதும் அவசியம்.

பின்பு பகிரங்க அறிக்கை வேண்டும்

ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட நன்மை அனைவராலும் ஒப்புக் கொள் ளப்பட வேண்டும். ஒரு ஆத்துமாவை விடுவிக்க தேவன் தமது கிருபையை விளங்கப் பண்ணும் போது உலகம் அதை அறிந்து கொள்ள அவர் விரும்புகிறார். அவரே எல்லாவற்றிற்கும் மேலானவர் என்று அறியப்படவும் கனப்படுத்தப் படவும் அவர் விரும்புகிறார். அவருக்குச் சொந்தமானவர்கள் அவரை அறிக்கை யிடவும் அவரே ராஜா என்று அறிவிக் கவும் அவர் விரும்புகிறார். இந்த அர்ப் பணிப்பு இல்லை என்றால் அது அரை மனதுள்ளது என்றுதான் சொல்ல முடியும்.

பொது அறிக்கையுடன் அவரு டைய ஜனங்களோடு இணைந்து அவர் களை நமது ஜனங்களாக ஒப்புக் கொள்ள வேண்டும். சகோதர அன்புதான் நாம் அவரது சீஷர்கள் என்பதற்கு அடை யாளம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் தேவ பிள்ளைகள் கொஞ்சமாக வோ, ஒதுக்கப்பட்டவர்களாகவோ, பூரணமற்றவர்களாகவோ இருந்தாலும் நாம் அவர்களோடு இணைந்து இருக்க வேண்டும். அவர்களை நேசிக்க வேண்டும். அவர்களோடு ஐக்கியமாயிருக்க வேண்டும். சகோதர அன்பு வல்லமை யுடையதும் அற்புதமானதுமாகும். அது அன்புக்கு இருதய வாசலைத் திறந்து தேவன் வாசம் செய்ய இடமளிக்கிறது.

உங்கள் அர்ப்பணிப்பை முழுமைப்படுத்த உலகத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் நீங்கள் வேறுபட

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

வேண்டும். அசுத்தமானதைத் தொடாதிருங்கள். உலகம் தீமையானவனின் வல்லமைக்குள் இருக்கிறது. எது பாவம் எது சட்ட பூர்வமானது என்று கேட்க வேண்டாம். சட்ட பூர்வமானதாயிருந்தாலும் தேவனுக்காக முழுமையாக வாழ விரும்புகிறவர்கள் சிலவற்றைத் தவிர்க்க வேண்டும். தேவனுக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் போல பரிசுத்தமாய் வாழுங்கள். இயேசுவுக்காக இம்மையில் எதனை இழந்தாலும் இவ்வாழ்விலும் நூறு மடங்காகப் பெறுவோம்.

முழுமையான அர்ப்பணிப்பு நம்மை தேவனுக்குப் பயன்படுகிறவர்களாகவும் அவரது பணிக்குத் தகுதியுள்ளவர்களாகவும் ஆக்கும். தேவனுக்கு நீங்கள் தேவை என்பதிலும் அவர் உங்களை மிகவும் ஆசீர்வதிப்பார் என்பதிலும் சிறிதும் சந்தேகம் வேண்டாம். அவர் உங்களை தமது ஆசீர்வாதத்தாலும் அன்பாலும் ஆவியாலும் நிரப்பும்படி உங்களை அவரிடம் ஒப்படையுங்கள். நீங்கள் ஆசீர்வாதமாயிருப்பீர்கள்.

யாருமே முழுமையான அர்ப்பணிப்பு எட்டா உயரமானது என்று பயப்பட வேண்டாம். நம்மிடம் பெற்றுக் கொண்டு வல்லமை தராத ஒரு சட்டத்தின் கீழ் நாம் இருக்கவில்லை. நீங்கள் தானாகக் கிரியை செய்யும் கிருபையின் கீழிருக்கிறீர்கள். முதல் அர்ப்பணம் போல ஒவ்வொரு முறையும் மறு அர்ப்பணம் செய்யும் போதும் இயேசுவுக்காக அதைச் செய்கிறீர்கள். பிதா அவரைக் கொண்டு எல்லாவற்றையும் செய்கிறார். அர்ப்பணிப்பு என்பது ஒரு விசுவாச செயல். அது மகிமையான விசுவாச வாழ்வின் ஒரு பகுதி. நீங்கள் "நானல்ல, என்னிலிருக்கிற தேவ கிருபையே இதைச் செய்யும். நான் அவரிலுள்ள விசுவாசத்தினால் மட்டும் பிழைத்திருக்கிறேன்" என்று சொல்ல வேண்டும்.

ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவரே, எனது இருதயக் கண்களை திறந்து, நான் எவ்வளவு முழுமையாய் உமக்கு முன் காணப்படுகிறேன் என்பதைக் கண்டு கொள்ள உதவி செய்யும். எனது இருதயத்தின் அந்தரங்க பகுதியில் ஒரே வல்லமையாயிருந்து முழுமையாய் செயல்படச் செய்து உமது சொந்தமாவே வைத்துக் கொள்ளும். உலகம், நீர் எனது ராஜா என்பதைக் கண்டு கொள்ளட்டும். நான் உம்முடைய சித்தத்தை மட்டுமே கேட்கட்டும். உலகத்தை விட்டு நான் பிரிந்திருப்பதாலும் உமது ஜனத்திற்கு நான் என்னை ஒப்படைத்திருப்பதாலும், உமது சித்தத்தையே நான் செய்வதாலும் நான் முழுவதுமாய் உம்முடையவன் என்பது விளங்கட்டும். ஆமென்.

தேவனுக்காக அதிகமாக உழைத்தவர்கள் வரும்பாலும் அதிகாலையில் முழங்காலில் நின்றிருக்கிறார்கள். அதிகாலை நேரத்தையும் அதின் புதிய வாய்ப்பையும் தேவனைத் தேடாமல் வேறு வேட்கைகளில் செலவிடுகிறவர்கள் மீதி நேரத்தில் அவரைக் கண்டு பிடிப்பதில்லை.

சிலுவையின் லாபம்: "நானல்ல கிறிஸ்துவே"

The gain of the Cross: "Not I, But Christ"

J. Gregory Mantle (1853-1925)

தூய ஆவியானவர் ஒவ்வொரு புதிதாய்ப் பிறந்த ஆத்துமாவையும் இலக்குக்கு நேராக வழி நடத்துவதை, பழக்கமான வார்த்தைகளால் பவுல் 'நானல்ல கிறிஸ்துவே' என்று வெளிப் படுத்துகிறார். மனிதனது 'நான்' மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, தூய ஆவியானவரின் வல்லமையால் எப்போதும் மரண இடத்திலேயே வைக்கப்படுகிறது. கிறிஸ்து 'நான்' என்ற இடத்தை எடுத்துக் கொண்டு, சிங்காசனத்திலிருந்து ஆட்சி செய்கிறார். ராஜாங்கம் அவரது தோள் களின் மேலிருக்கிறது.

நம்மைச் சுற்றிலுமுள்ளவர்கள் 'நான் அல்ல கிறிஸ்துவே' என்ற கண்ணோட்டத்தில் எப்படி எப்போதும் என்னைப் பார்க்க முடியும்? பவுலின் வார்த்தைகளில் அவரைத் தரித்துக் கொள்ள வேண்டும்.

இக்னேஷியஸ் என்பவர், 'எனது அன்பு சிலுவையில் அறையப்பட்டு விட்டது' என்று கூறிய போது அவரது இயற்கையான உலக பாசங்கள் சிலுவை யில் தொங்கவிடப்பட்டன என்றும், அவர் அதற்குப் பதிலாக பரலோக அழிவில்லாத அன்பினைப் பெற்றுக் கொண்டார் என்றும் வெளிப்படுத் தினார். கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏன் இந்த அன்புத் தாழ்ச்சி? ஏன் உத்தம சீஷத்துவத்தின் அடையாளம் தெரிய வில்லை? காரணம், தன் வலிமையில் குறைவுள்ளதும் எளிதில் எரிச்சலடைவது மான பழைய அன்பை அவர்கள் தள்ளி விட்டு, கிறிஸ்துவின் அன்பைத் தரித்துக் கொள்ளவில்லை. அந்த அன்பு எரிச்ச லடையாது, தீமையை நினைக்காது, எல்லாவற்றையும் சகிக்கும், எல்லாவற் றையும் நம்பும், எல்லாவற்றையும் விசுவாசிக்கும், அது ஒரு போதும் ஒழியாது.

"இயற்கை வாழ்வுக்கு மரிக்கிறவன் வாழ்வில் தெய்வீக அன்பு நிரம்பி வழிவது போல உள்ளேயும் பாய்ந்து கொண்டிருக்கும்" என்று ட்டாலர் என்பவர் கூறியிருக்கிறார். தங்களில் மரிக்காதவர்கள் இயற்கை அன்புடைய வர்களாக அது தேவ கிருபை என்று எண்ணுகிறார்கள். அதைத் தவறு என்று சொல்லும்போது கோபடைகிறார்கள். தெய்வீக அன்பு பொறுமையுடன் எல்லா வற்றையும் சகிக்கிறது. தன்னை யாரும் வெறுக்க அனுமதிப்பதோடு எவரையும் வெறுப்பதில்லை. சுயம் மரிக்காதவர்கள் தங்கள் கருத்து ஒப்புக் கொள்ளப்படா விட்டால் சமாதானத்தை இழந்து விடுகிறார்கள்.

மாறாத அன்பை பெற்றுக் கொள்ள கிறிஸ்துவின் வாஞ்சையை நிறைவேற்ற ஒவ்வொரு வினாடியும் ஜெபிப்பதே அதன் இரகசியம். "நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்தில் இருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும்..." யோ.17:26

இயேசுவும், தெய்வீக அன்பும் நம்மில் வாசம் பண்ணுவதும் ஒன்றே. அவை பிரிக்க முடியாதவை.

இயற்கையான மற்றும் தெய்வீக அன்பைப் போலவே மனித மற்றும் தெய்வீகப் பொறுமையும் காணப் படுகிறது. ஆண்டவராகிய இயேசுவின் பொறுமையைக் குறித்து அறியாவிடில் மனிதன் எத்தனை சீக்கிரமாக எரிச்சல டைந்து தன்னைச் சுற்றிலுமுள்ள மக்களையும் பாதிப்படையச் செய்கிறான். உண்ணும் உணவு சிறிது தாமதிப்பதாலும், ஒருவர் கடமையைச் சரியாகச் செய்யாவிட்டாலும், போதகரின் பிரசங்கம் சற்று நீண்டு விட்டாலும் மனித பொறுமை அற்றுப் போகிறது. அது ஒருவருக்கு மட்டுமல்ல, பொறுமையற்ற ஆவி அனேகரை பாதிப்படையச் செய்யும்.

'நான்' என்பதுதான் பொறுமை யற்ற ஆவி வெளிப்படக் காரணம். அதற் காக சுயம் மரிக்க ஜெபித்து அனுதினமும் இயேசுக் கிறிஸ்துவின் ஆட்டுக்குட்டி போன்ற பொறுமையைத் தரித்துக் கொள்ள வேண்டும். தேவ சித்தத்தின் மையத்தில் வாழ வேண்டும். அவர் சித்தமின்றி எதுவும் நடப்பதில்லை. எரிச்சலை ஏற்படுத்தும் சம்பவங்களின் போது நமது பொறுமை மனித தன்மை யானதா அல்லது தெய்வீகமானதா, பழைய மனுஷனுக்குரியதா அல்லது புதிய மனுஷனுக்குரியதா என்பது விளங்கும்.

கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்

தரித்துக் கொள்வது என்ற செயல் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அடிக்கடி கூறப்படுகிறது. *(ஏசா.61:10; சங்.132:16; சகரி.3:1-5; ரோமர்.13:14; எபேசி.4:22-24; கொலோ.3:8-14; வெளி.19:8)*

கிறிஸ்துவைத் தரித்துக் கொள் வதால் சுயத்தைத் தள்ளிவிட முடியும். 'நான்' என்ற கொடுங்கோலனை போட்டியிட வல்ல இயேசுவைத் தவிர யாரும் வெற்றி பெற முடியாது. பிழைத்திருக்கிற வர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத் திராமல், தங்களுக்காக மரித்து எழுந்த வருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம். *(2 கொரி. 5:15)*

R.W. டேல் என்பவர், நாம் நமது பழைய சுயத்தைத் தள்ளிவிட்டு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ள வேண்டும். அவரது நீதி, பரிசுத்தம் ஆகிய வற்றின் ஒவ்வொரு பகுதியையும் சொந்த மாக்க வேண்டும். அவரது தாழ்மை, தைரியம், மென்மை, உத்தமம், பாவத்தின் மீதான வெறுப்பு, பாவ உணர்வு பெற்றவர்கள் மேலுள்ள உருக்கம், பிறருடைய நீதியால் சந்தோஷப்படுதல், பிறருடைய பெலவீனங்களில் பொறுமை,

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

தனது பாடுகளை அமைதியான அர்ப்பணத்துடன் சகித்தல், பிறருடைய பாடுகளில் மனதுருக்கம், சொகுசான வாழ்வு, மதிப்பு ஆகியவற்றின் நிர்விசாரம், பிறருடைய இரட்சிப்புக்காகவும் துக்கங்களுக்காகவும் பரிதாபம் ஆகியவற்றை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

பிதாவின் மேலுள்ள பரிபூரண விசுவாசம், பிதாவின் அதிகாரத்தில் கீழ்ப்படிதல், பிதாவின் சித்தம் செய்வதில் சந்தோஷம், பிதாவின் மகிமைக்கான உற்சாகம் ஆகியன நம்மில் உண்டாக வேண்டும். நாம் எதிர்பார்க்கும் பரிபூரணம் மனோபாவனையின் சொப்பனமல்ல, ஆனால் கிறிஸ்துவின் மூலம் வருகிற ஒன்றாகும். கிறிஸ்துவில் காணப்பட்ட மானிட பரிபூரணம் உண்மையாகவே மனிதனுடையது தான். ஆனால் அது மனித குணாதிசயத்திற்கும் தேவனுடைய வாழ்வின் சரித்திரத்திற்கும் பெயர்க்கப்பட்டது. அவர் இன்றும் ஜீவிக்கிறார். எனது வாழ்வின் நீரூற்றுகள் அவரிலிருக்கிறது. பிதாவின் நித்திய சித்தத்தின்படி திராட்சச் செடியிலிருந்து கொடிக்கு ஜீவன் அளிக்கப்படுவது போல நானும் கிறிஸ்துவிலுள்ள ஜீவனைப் பெற்று வெளிப்படுத்த வேண்டும். எனவே நான் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ள அல்லது தேவன் அவரில் சிருஷ்டித்த பரிபூரண மனிதத்துவத்தை நான் சொந்தமாக்கிக் கொள்ள முயற்சி செய்யும் போது அது பாவனை செய்வ தல்ல. அது ஆவியிலும் எனது சன்மார்க்க தன்மையிலும் எனது பெலனுக்கு மேலானதாயிருக்கலாம். நான் ஏற்கெனவே தேவன் எனக்குக் கொடுத்த ஜீவனை வளரச் செய்கிறேன். நான் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் கிறிஸ்துவில் காணப் பட்ட நீதியும் பரிசுத்தமும் நிறைந்த வாழ்வு ஏற்கெனவே எனது வாழ்வில் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டி ருக்கும்.

"...கிறிஸ்து நமது நீதிக்கு வாக்குத் தத்தமாகவும் நமது பாவங்களுக்குப் பலியாகவுமிருக்கிறார்".

"வஞ்சிக்கப்படாதபடிக்கு கவனமாயிருங்கள்"

"Take heed that you not be deceived"

Rich Carmichael

சத்தியமும் வஞ்சிக்கப்படுதலும் பல பிரிவுகளை உடையவை. ஒரு புறமாக சத்தியம் நம்மை வெளிச்சத்தினிடத்திற்குக் கொண்டு வருகிறது (யோவா.3:21), நம்மை விடுவிக்கிறது (8:32), பரிசுத்தமாக்குகிறது (17:17), இரட்சிப்புக்கு நேராக வழி நடத்துகிறது, (எபேசி.1:13) நமது வாழ்வில் நல்ல கனிகளைக் கொடுக்கச் செய்கிறது. (கொலோ.1:5-6) மற்றும் நம்மை காக்கிறது (சங்.40:1) மறுபுறமாக வஞ்சித்தலும் சத்தியத்தை அடக்கி வைப்பதும் ஆவிக்குரிய அந்தகாரத்திற்கு வழி நடத்துகிறது. (ரோமர்.1:18-21), பாவத்திற்கு அடிமைப் படுத்துகிறது (1:28-31) தேவனோடுள்ள உறவை இழக்கச் செய்கிறது (உபா.11:16 ரோமர்.1:28) பிசாசின் சித்தத்திற்கு ஆவிக்குரிய அடிமையாக்குகிறது. (2 தீமோ.2:25-26) ஆவிக்குரிய மரணத்தையும் ஏற்படுத்துகிறது. (ரோமர்.7:11)

சத்தியத்திற்கும் வஞ்சகத்திற்கும் இடையிலுள்ள போர் மனிதனது ஆரம்ப காலத்திலிருந்தே காணப்படுகிறது. ஏதேன் தோட்டம் இத்தனை அழகாக அமைக்கப்பட்டும் பிசாசு திட்டமிட்டு ஏவாளை வஞ்சித்து தேவனுடைய சத்தியத்தை சந்தேகிக்கவும் அதற்குக் கீழ்ப்படியாமலிருக்கவும் செய்து விட்டான். தேவன் தெளிவாக ஆதாம் ஏவாளிடம் நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசிக்கக் கூடாதென்று எச்சரித்திருந்தார். "ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்; அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" ஆதி.2:17. ஆனால் சாத்தானோ இதற்கு எதிரானதை நம்பும் படி ஏமாற்றி விட்டான். "அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது" ஆதி.3:4,5.

இன்றுவரை தேவனுடைய சத்தியத்திற்கு எதிரான போர் ஓய வில்லை. ஏனெனில் பிசாசு பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான். (யோவா.8:44, வெளி.12:9) அவன் தொடர்ந்து சத்தியத்தை எதிர்த்து மக்களை ஏமாற்றி தடம் புரளச் செய்கிறான். வஞ்சித்தல் பல திசைகளிலு மிருந்தும் வருகிறது. பிசாசு, ஆவிக்குரிய விசைகள், பொய் போதகர்கள், பொய் தீர்க்கர்கள், உலகம், பாவம், பொருளாசை மற்றும் நமது சொந்த இருதயம் கூட வஞ்சிப்பதற்கு ஏதுவாயிருக்கிறது.

இந்தப் போர் இந்நாட்களில் அதிகரித்து வருகிறது. இயேசு, "அனேகக் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்" மத்.24:11 என்று எச்சரித்திருக்கிறார். அப்போஸ் தலனாகிய பவுல், "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள், மோசம் போக்கு கிறவர்களாகவும், மோசம் போகிறவர் களுமாயிருந்து மென் மேலும் கேடுள்ள வர்களாவார்கள்" 2 தீமோ.3:13 என்று எழுதுகிறார். மேலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி "பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" 1 தீமோ.4:1 எனவும் குறிப் பிடுகிறார். பிசாசு தனக்கு இன்னும் கொஞ்ச காலம் மட்டுமே இருப்பதால் மக்களை அளவுக்கு மீறி தாக்குகிறான்.

பொய்மையும் வஞ்சகமும் அதிகரித்ததால் தேவனுடைய சத்தியம் அமுக்கப்படுவதையும் நிராகரிக்கப் படுவதையும் காண்கிறோமல்லவா? எரேமியா, ஏசாயா, ஓசியா ஆகிய தீர்க்கர் களின் விளக்கங்கள் இந்த நிலைமை களைக் காண்பிக்கின்றன. "ஆகையால் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளாமலும், புத்தியை ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கிற ஜாதி இதுதான் என்றும் சத்தியம் அழிந்து அது அவர்கள் வாயிலிருந்து அற்றுப் போன தென்றும் அவர்களுக்குச் சொல்" எரே.7:28. "நியாயம் பின்னிட்டு அகன்றது, நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாற் போகிறது" ஏசா.59:14. "...தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப் பற்றிய அறிவும் இல்லை" (ஓசியா.4:1) ரோமர் நிருபம் கூறுவதென்ன? "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது". "...தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள்" (ரோமர்.1:18,25)

சத்தியத்தைத் தழுவிக் கொள்ளுங்கள்

இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் பவுல் நமக்குக் கொடுக்கும் ஆலோசனை, தேவனுடைய சர்வாயுதத் தினை அணிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். "நீங்கள் பிசாசின் தந்திரங் களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ள வர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்" எபேசி.6:11. முதலாவது சத்தியம் என்னும் அரைக் கச்சையைக் கட்டிக் கொள்ள ஆலோசனை தரப்படுகிறது எபேசி.6:14. சத்தியம் மிகவும் முக்கிய மானது. சங்கீதக்காரன் சத்தியத்தைக் குறித்து "மெய்வழியை நான் தெரிந்து கொண்டு" என்று சங்.119:30-ல் குறிப்பிடு கிறார். நாம் சத்தியத்தால் நம்மை இடைகட்டிக் கொண்டு, அதனைத் தழுவிக் கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்து, அந்த சத்தியத்திலேயே நடப்போமாக. நாம் தூய ஆவியானவரை, சத்திய ஆவியாகிய அவர் எல்லா சத்தியத்திலும் நம்மை நடத்தும்படி அவரை நோக்கிப் பார்ப்போம் யோவா.16:13. தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு யோவா.17:17 நம்மை மறுபடியும் புதிதாக அர்ப்பணிப்போம். நமது கண் களையும் இருதயங்களையும் சத்தியம் நிரம்பியவராகிய தேவனுக்கு நேராக ஏறெடுப்போம். (யாத்.34:6) அவரது சத்தியம் என்றும் நிலைநிற்கும் (சங்.117:2) நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 'வழியும் சத்தியமும் ஜீவனுமானவர்' (யோவா.14:6; எபேசி.4:21) இந்த நாட் களில் அவரது எச்சரிப்பினை கவனிப் போம். "நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" லூக்.21:8.

"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்; அவைகள் என்னை நடத்தி, உமது பரிசுத்த பர்வதத் திற்கும், உமது வாசஸ்தலங்களுக்கும் என்னைக் கொண்டு போவதாக" சங்.43:3.

ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களும் அவர்கள் ஜெபங்களும்

Soul winners and their prayers

Samuel L. Brengle (1860-1936)

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" யாக்.5:16.

ஆத்தும ஆதாயம் செய்யும் அனைத்து தேவ பிள்ளைகளும் பலத்த ஜெப போராட்ட வீரர்கள்தான் என்பதில் ஐயமில்லை. அது போலவே பெரிய எழுப்புதல்கள் அனைத்தும் முழங்காலில் நின்று தொடர்ந்து போராடி ஜெபித்தவர்கள் மூலமாகவே ஏற்பட்டுள்ளது. இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கு முன்னதாகவே, திரளான மக்கள் அவரைப் பின்பற்றிய போது அவர் நாற்பது நாட்கள் இரவும் பகலும் தனியாக ஜெபத்திலும் உபவாசத்திலும் தரித்திருந்ததை மத்தேயு.4:1-11 வசனங்களில் படிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் இடைவிடாமல் இரவும் பகலும் ஜெபத்திலும், வேண்டுதலிலும், மன்றாட்டிலும் தரித்திருந்தார் என்பதனை அப்.16:25, பிலி.1:3-11; கொலோ.1:3; 9-11 வசனங்களில் படித்து அறியலாம்.

பத்து நாட்கள் தொடர்ந்து ஜெபித்த பின்புதான் மக்கள் பெந்தே கோஸ்தேயின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டதையும், மூவாயிரம் மக்கள் இரட்சிக்கப்பட்டதையும் நாம் அறிவோம். இன்னும் தொடர்ந்து ஜெபித்ததால் 5000 பேர் இரட்சிக்கப்பட்டதையும் அறிவோம். அனேகர் வசனத்தை விசுவாசித்தார்கள். பிரதான ஆசாரியர்களும் விசுவாசத்திற்குக் கீழ்படிந்தார்கள் என்று அப்.2:4-6; 4:4; 6:4-7 வசனங்கள் கூறுகின்றன.

லூதர் ஒரு நாளில் மூன்று மணி நேரம் ஜெபித்தார். அதன் மூலம் பல்லாண்டுகள் சிறைப்பட்ட தேசங்கள் விடுதலை பெற்றன.

ஜான் நாக்ஸ் இரவு முழுவதும் ஜெபிப்பவர். 'ஸ்காட்லாந்தை எனக்குத் தாரும், அல்லாவிட்டால் நான் சாகட்டும்' என்று அவர் ஜெபித்தார். தேவன் ஸ்காட்லாந்தை அவருக்கு அளித்தார்.

வெஸ்லி என்ற பக்தனும் அனேக இரவுகளை ஜெபத்தில் செலவு பண்ணின படியால் தேவன் அவரை ஆசீர்வதித்து அவருடைய எதிர்பார்ப்புக்கு மேலான வைகளைக்கூசெய்தார். அவரும் அவருடைய உதவியாளர்களும் வல்லமை பெற்று இங்கிலாந்திலும், உலகின் பல பாகங்களிலும் எழுப்புதல் ஏற்படக் காரணமாயிருந்தார்.

இரவு முழுவதும் ஜெபத்தில் செலவு பண்ணிய பின்பு ஜோனதான் எட்வர்ட்ஸ் பிரசங்கித்த அற்புதமான பிரசங்கம் புதிய இங்கிலாந்தின் பெரிய எழுப்புதலுக்கு ஏதுவாயிற்று.

ஜான் லிவிங்ஸ்டன் என்ற வாலிபன் ஸ்காட்லாந்திலுள்ள ஒரு மிகப் பெரிய சபையில் பிரசங்கிக்கும்படி அழைக்கப்பட்டார். தனது பலவீனத்தை உணர்ந்த அவர் இரவு முழுவதும் ஜெபத்தில் செலவு பண்ணினார். அடுத்த நாள் அவர் பிரசங்கித்த போது ஐந்நூறு பேர் மனந்திரும்பினர். தேவனுக்கே மகிமையுண்டாவதாக. ஆண்டவரே இவ்வாறு ஜெபிக்கிற ஜெப வீரர்களை எழுப்புவீராக.

ஃபின்னியின் ஜெபம் சமுதாயங்களை தேவ ஆவியினால் நிரப்பியதோடு, மனிதர் அந்த வல்லமைக்கு எதிர்த்து நிற்க முடியவில்லை.

ஆனால் ஜெபம் என்பது ஒரு எளிதான பணியல்ல. அது கடினமானது. இயேசுவைப் போல் வியாகுலப்பட்டு ஜெபிக்க சமயம் கொடுத்தால் இயேசுவோடுள்ள ஐக்கியத்தின் சந்தோஷத்தைப் பெற முடியும்.

Rev. வில்லியம் பிரம்வெல் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் மனந்திரும்பி சுத்திகரிக்கப்பட்டனர். அவர் ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் ஜெபித்தார். தன்னை ஜெபத்திற்காகத் தாமே பலவந்தம் பண்ணினார். அவர் ஜெபிக்க ஆரம்பித்த பின்பு வறட்சி ஏற்படுவதுமுண்டு. ஆனால் அவர் விசுவாசத்துடன் போராடி ஜெபிப்பார். அப்போது பரலோகம் திறக்கப்பட்டு, வெற்றி கிட்டும் வரை தேவனோடு போராடுவார். பின்பு அவர் பிரசங்கிக்கும் போது மேகங்கள் கலைந்து ஜனங்களின் மேல் ஆசீர்வாத மழை பொழியும்.

Rev. ஜான் ஸ்மித் என்பவரின் ஜெப வாழ்வு வில்லியம் பூத் போன்ற பக்தர்களின் வாழ்வுக்குத் தூண்டுதலாயிருந்தது என்று கூறப்படுகிறது. அவரும் அதிகமான சமயத்தை ஜெபத்தில் செலவு செய்தார். ஆரம்பிக்கும் போது சற்று கடினமாயிருந்தாலும் கிடைத்த ஆசீர்வாதத்தால் ஜெபத்தை நிறுத்த முடிவதில்லை என்று தன் அனுபவத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் பலத்த எழுப்புதல் ஏற்பட்டது.

ஆண்டவராகிய இயேசு, "**சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுங்கள்**" லூக்.18:1 என்றார். பவுல் "**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்**" என்றார் 1 தெச.5:17.

துணிந்து ஜெபிக்கிற ஒரு விசுவாசியின் மூலம் ஒரு பட்டணம் அல்லது தேசம் தேவனை அறிய முடியும். எலியா இத்தகைய ஜெபத்தை கர்மேல் பர்வதத்தில் ஏறெடுத்தான். பின்வாங்கிய இஸ்ரவேலருக்காக எலியா இப்படி ஜெபித்தான். தானியேல் பாபிலோன் தேசத்திலே ஜெபித்தான். இப்படி எல்லோரும் ஜெபித்தால் தேசத்தில் எத்தனை பெரிய காரியங்கள் நடைபெற முடியும்? தேவன் ஜெபத்திற்குப் பதில் தர விருப்பமற்றவர் என்று எண்ண வேண்டாம். அவருக்கு நேராக இருதயத்தில் செம்மையானவர்களுக்கு அவர் நிச்சயம் பதில் தருவார்.

ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்.

ஆவியானவரும் வெளிச்சம் கொடுத்தலும்

The spirit and illumination

Samuel Chadwick (1860-1932)

யோவான்.16:13-14 படிக்க.

தெய்வீக சத்தியம் இலக்கணமோ, கல்விக்குரியதோ, தர்க்க சாஸ்திரமோ அல்ல. ஆனால் தேவனுடைய தூய ஆவியானவரால் உண்டானது. ஆழமானவற்றை வெளிப்படுத்த அவர் நமக்கு அருளப்பட்டிருக்கிறார். ...நமக்கோ தேவன் அவற்றை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார் 1 கொரி.2:10. அங்கு தெய்வீக மகிமையின் அலங்காரமான ஓரத்தைக் காண்கிறோம். அதனை மோசேயும் தீர்க்கர்களும் கண்டனர். அவை மகிமை நிறைந்தும் அற்புதமாகவும் காணப்பட்டன. ஆனாலும் அங்கு வானங்களைப் போலவும் கடலைப் போலவும் ஆழங்களும் கடக்க முடியாத பகுதிகளுமிருந்தன.

தேவனிலுள்ள ஆழங்களை தூய ஆவியானவரின் வெளிப்படுத்தலின்றி வேறு எந்த வழியிலும் அறியவே முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. நமது ஞானம் அவரைக் கண்டுபிடிக்கப் போதுமானதல்ல. இவ்வுலக ஞானிகளும் மேதைகளும் அவரைக் கண்டு கொள்ள முடியாது. கிணறு ஆழமானது. அவர்களிடம் மொண்டு கொள்ள எதுவுமில்லை. ஆழமானவற்றைக் கண்டுபிடிக்க முடியாது, அவை பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவை. அவை சம்பாதிக்கப்பட வேண்டியவையல்ல, அவை விசுவாசிக்கப்பட வேண்டியவை. அவை போதிக்கப்பட வேண்டியவை அல்ல, அவை வெளிப்படுத்தப்படுகின்றன. ஆவியானவர் தேவனுடைய ஆவியானவராயிருப்பதால் அவர் மூலமாகவே தேவனுக்குரியவைகளை நாம் அறிய முடியும்.

ஆவியானவர் தேவனை மகிமைப்படுத்தும்படி அருளப்பட்டிருக்கிறார். எனவே எந்த மனிதனும் ஆவியானவரின் பிரத்தியேக வெளிப்படுத்தலின்றி இயேசுவை அறிய முடியாது. கிறிஸ்துவின் ஆழங்கள் மனித ஞானத்தால் கண்டு பிடிக்க முடியாது.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

அவரது நாசரேத்தூர் வாழ்வு கதாசிரியர்களால் மறுபடியும் கட்டப்படலாம். வல்லுநர்களால் நடிக்க வைக்கப்படலாம், கலைஞர்களால் அழிவற்றதாக்கப் படலாம். ஆனால் அவைகளில் கிறிஸ்து இருப்பதில்லை. பரிசுத்த ஆவியினாலே யன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக் கூடாதென்றும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன் 1கொரி.12:3. அவரது போதனையும் அதற்கொத்திருக் கிறது. இலக்கணம் சத்தியத்தைக் கண்டு பிடிக்க முடியாது. எழுத்து கொல்லுகிறது. சிலுவை எப்போதும் இவ்வுலக ஞானத் திற்கு புரியாததும், பைத்தியமும், வெறுக்கப்பட்டதுமாயிருக்கிறது. ஆவி யானவருக்கும் அவரால் ஒளியூட்டப் பட்டவர்களும் அவரால் போதிக்கப் பட்டவர்களும் மட்டுமே அதை அறிந்து கொள்ள முடியும்.

கிறிஸ்துவின் ஆழங்கள் தேடிக் கண்டுபிடிக்க இயலாதவை. கிறிஸ்துவின் அன்பு அறிவுக்கு எட்டாதது. கிறிஸ்து வின் கிருபை அளவிட முடியாதது. கிறிஸ்துவின் மகிமையின் ஆழம் அளக்கக் கூடாதது. அவரது ஆழங்கள் எட்டாத ஆழமும் எட்டாத உயரமுமாயிருக் கின்றன. இயற்கை மனிதனுக்கு அவை பொருளற்றவை. ஆவியானவரால் போதிக்கப்பட்டவர்களுக்கு அவை நித்தியமான நிச்சயங்கள். நாம் அவரை அறிந்திருக்கிறோம். நாம் தூய ஆவியான வரின் அபிஷேகத்தைப் பெற்றிருப்பதால் அவர் தம்முடையவைகளை எடுத்து நமக்கு வெளிப்படுத்துகிறார்.

நியாயத்தீர்ப்பு என்பது மனந்திரும்புதலுக்கான ஒரு அழைப்பு

Judgement: A call to repentance

Derek Prince (1915-2003)

தேவன் நம்மை நியாயந் தீர்ப்பதால் அவர் இரக்கமற்றவர் என்பது பொருளல்ல. நாம் மனந்திரும்பும் படியாகவே அவர் நம்மை நியாயந் தீர்க்கிறார். அவரது தீர்ப்புக்கு முன்பாக அவர் விரும்பும் விதமாக நாம் நடக்கத் தவறினால் நாம் மனந்திரும்பும்படி இரக்கத்தைக் கட்டளையிடுகிறார்.

எரே.18:7-10 வசனங்கள் கூறு வதைப் பாருங்கள்: "பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ராஜ்யத் துக்கு விரோதமாகவும் சொன்ன மாத்திரத்தில் நான் விரோதமாய் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கை விட்டுத் திரும்பினால் நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கை செய்யா தபடிக்கு மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும் ஒரு ஜாதியையும், ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக் கேளாமல் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களா னால் நானும் அவர்களுக்குச் செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாத படிக்கு மனம் மாறுவேன்".

தேவன் இந்நாட்களிலும் நமது தேசங்களில் இப்படி செயல்பட முடியும் என்று நீங்கள் சிந்திப்பதுண்டா? பல காரியங்களில் நாம் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு உள்ளானவர்கள் என்பதை சிந்திப்பதில் தாமதமாகவும், பிடிவாதமாகவுமிருக்கிறோம். பராது சொல்லிக் கொண்டும் விமர்சித்துக் கொண்டும் இருப்பதற்குப் பதிலாக நாம் மனந்திரும்ப தேவன் அழைக்கிறார். நாம் மனந்திரும்பினால் நமக்கு இரக்கம் காண்பிக்க அவர் வாக்களித்திருக்கிறார்.

2 நாளா.7:13-14 இது தெளிவாகக் கூறப்படுகிறது. சாலோமோன் தேவா லயத்தைக் கட்டி முடித்த பின்பு அவனுக்கு தேவன் இவ்வாறாக வெளிப் படுத்தினார். "நான் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளை யிட்டு அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும் போது, என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத் திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, தேசத்திற்கு க்ஷேமத்தைக் கட்டளையிடுவேன்." இது தேவன் காண்பிக்கும் இரக்கம்.

தேவ ஜனங்கள் தங்கள் தேசத்தின் நிலைமைக்குப் பொறுப்பான வர்கள் என்று தேவன் காண்பிக்கிறார். ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்லுகிறவர் கள், ஆலயம் செல்லாதோர் தான் உலகின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் என்று கூறுவது வழக்கம். அப்படியல்ல என்று தேவன் கூறுகிறார். அவரது கூற்றுப்படி நாம்தான் பிரச்சனைகளுக் கெல்லாம் காரணமாயிருக்கிறோம். சூழ்நிலைகளை அவரிடம் ஒப்புவித்து விட்டால் அவரே எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். அவர் எப்போதும் நம்மோடிருக்கிறவர். நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்கும் காலமாயிருக்கிறது 1 பேதுரு 4:17. தேவனற்ற மக்களிட மிருந்து நியாயத்தீர்ப்பு தொடங்குவ தில்லை. தேவன் நியாயத்தீர்ப்பை தமது ஜனங்களிலிருந்தே தொடங்குகிறார். எனவே தேவ ஜனம் தமது வழிகளில் நடந்தால் உலகம் அவர்கள் மூலம் தேவனைக் கண்டு கொள்ள முடியும் என்பது அவரது சிந்தனை.

தேவனுடைய ஆவியானவர் உலகத்திற்குக் கொண்டு வரப்பட நாம் வாய்க்காலாயிராவிட்டால் நாம் அதற்குத் தடையாயிருக்கிறோம் என்பது தான் பொருள். நாம் அளிக்கும் பதிலைப் பொறுத்தே பலன் ஏற்படக்கூடும். ஆக தேசத்தின் க்ஷேமத்திற்குக் காரணமா யிருப்பவர்கள் தேவ ஜனம் என்று அழைக்கப்படும் நாமே.

தேவனுடைய நிபந்தனைக்கு நாம் கட்டுப்பட்டால் தேசத்திற்கு நம்பிக்கையுண்டு. நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதில் உத்தமமாயிருந்தால் நியாயத்தீர்ப்புக்குப் பதிலாக தேசம் இரக்கத்தையும், க்ஷேமத்தையும் பெற்றுக் கொள்வது சாத்தியம்.

ஜெபித்துக் கொண்டேயிருங்கள் - விட்டு விடாதீர்கள்!

Don't give up! Keep praying!

Sammy Tippit - *ன் சாட்சி*

என் குடும்பத்தில் முதல் முதலாக கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக் கொண்டவன் நான். கர்த்தர் என் இருதயத்தில் வந்து என்னை இரட்சித்த அன்று இரவே நான் பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள்ளேன் என்று அறிந்து கொண்டேன். இரண்டு நாட்களுக்குப் பின் இந்த அழைப்பை நான் ஏற்றுக் கொண்டேன். இன்று வரை அதைத் தொடருகிறேன்.

ஒரு சமயம் என் தகப்பனார் மிகவும் வியாதியாயிருந்தார். ஒரு நாள் சிலர் வீட்டிற்கு வந்து அவரோடு சுவிசேஷத்தை பகிர்ந்து கொண்டனர். அப்போது அவர் தமது வாழ்வைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். சிறிது காலத்துக்குள் அவர் மரித்து விட்டார்.

எனது தாயாரும் சகோதரனும் சகோதரியும் விசுவாசிகளல்ல. நான் இயேசுவை ஏற்றுக் கொண்டதால் என் தாயார் அதிக கோபமடைந்தார்கள். நான் அவர்களிடம் கிறிஸ்துவை சாட்சியாக அறிவிக்கும் போது, "நீ தேவனைப் பற்றி என்னிடம் ஒரு போதும் பேசாதே. நான் கிறிஸ்துவைப் பற்றிக் கேட்க விரும்ப வில்லை. எனவே தேவனைப் பற்றி ஒரு போதும் என்னிடம் பேசக்கூடாது" என்று சொல்லி விடுவார்கள்.

அம்மாவிடம் தேவனைப் பற்றிப் பேசக்கூடாது என்று சொன்னால் என்ன செய்வது? நான் தேவனிடம் என் அம்மாவைக் குறித்துப் பேசினேன். நான் அவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். இருபது ஆண்டுகள் அவர்களுக்காக ஜெபித்தேன்.

ஒரு நாள் டென்னிசி (Tennessee) என்ற பட்டணத்தில் ஒரு சுவிசேஷக் கூடுகையில் பிரசங்கிக்கும்படி நான் அழைக்கப்பட்டேன். அதை நடத்தும் குழுவினர் பட்டணம் முழுவதிலுமுள்ள வாலிபருக்காக அதனை ஒழுங்கு பண்ணு வதாக அந்த அழைப்பிதழ் மூலம் அறிந்து கொண்டேன். எனது சகோதரி அப்பட்ட ணத்தில் படித்துக் கொண்டிருந்தபடி யால் அதை சந்தோஷமாக எடுத்துக்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

கொண்டேன். அழைப்பை ஏற்றுக் கொண்டேன். அங்கு சென்ற போது அந்தக் கூடுகை அந்தப் பட்டணத்திலுள்ள சபைகளால் நடத்தப்பட வில்லை என்றும் இது ஒரே மனிதனுடைய அபிப்பிராயத்தால் நடத்தப் படுகிறது என்றும் அறிந்து கொண்டேன். அவர் மிகவும் ஐசுவரியவானான ஒரு தொழிலதிபர். ஆயிரக்கணக்கான மக்களை உட்கார வைக்கும் வசதியுடைய பெரிய அரங்கத்தை வாடகைக்கு எடுத்திருந்தார்.

அந்த இரவிலே அங்கு கூடிய வர்கள் நான் என் மனைவி, எனது சகோதரி, அவளது சினேகிதி மற்றும் என்னை அழைத்தவர் ஆகிய ஐந்து பேர் மட்டுமே. நான் எழுந்து ஐந்தாயிரம் பேருக்குப் பிரசங்கிப்பது போல பிரசங்கித்து விட்டு இறுதியில் அழைப்பு கொடுத்தேன். எனது சகோதரியும் அவளது சினேகிதியும் தங்கள் இருதயங் களைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தனர்.

ஆனால் எனது தாயார் சுவிசேஷத்தை எதிர்க்கும் கடின இருதய முடையவர்களாயிருந்தனர். கிறிஸ்மஸ் நாட்களில் அவர்களை சந்திப்பது மிகவும் கடினம். இருபது ஆண்டுகளுக்குப் பின் ஒரு தொலைபேசி அழைப்பு என தாயாரிடமிருந்து வந்தது. "Sammy நான் பெருமையுள்ளவளாயிருந்தேன். நான் கசப்பு நிறைந்தவளுமாய் வாழ்ந்தேன். இந்தப் பெருமைக் கும் கசப்புக்கும் இனி இடமில்லை. எனக்கு தேவன் வேண்டும், இயேசு வேண்டும், உதவி வேண்டும்" என்று பேசினார்கள்.

என்னால் அது என் தாயார் என்று நம்ப முடியவில்லை. தொலைபேசியில் அவர்கள் என்னோடு ஜெபித்துத் தன் இருதயத்தை இயேசுவுக்கு அர்ப்பணித் தார். ஒரு வருடத்திற்குப் பின்பு மறுபடியும் அவர்கள் பேசினார்கள். "Sammy உன் சகோதரன் உன்னோடு பேச விரும்புகிறார்" என்றார்கள். நான் உடனே அவரோடு தொடர்பு கொண்டேன். அப் போது அவர் கூறியது: "Sammy நான் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்திற்குச் சென் றேன். அங்கு என் இருதயத்தை ஆண்ட வருக்குக் கொடுத்து விட்டேன்".

முழுமையான அர்ப்பணிப்பு நம்மை தேவனுக்குப் பயன்படுகிறவர்களாகவும் அவரது பணிக்குத் தகுதியுள்ளவர்களாக வும் ஆக்கும்.

சில ஆண்டுகளில் என் தாயார் மரித்தார்கள். ஆனால் தனது கடைசி நாட்களில் ஜெபக்கூடுகைகளில் கலந்து கொள்வதுதான் அவர்களுடைய முக்கிய நோக்கமாயிருந்தது. அதன் பின்பு என்னை ஒரு போதும் எதிர்க்காமல் ஜெப ஆதரவு தந்து கொண்டிருந்தார்கள். எனது குடும்பம் முழுவதையும் ஜெபத்தின் மூலம் தேவன் இரட்சித்தார். நான் ஜெபிக்க மட்டும் முடிந்தது, ஆனால் தேவன் ஜெபத்தைக் கேட்டு குடும் பத்தில் அனைவரையும் இரட்சித்தார்.

அதிகாலையிலே தேவனைத் தேடுங்கள்

Seek God early

E.M. Bounds

தேவனுக்காக அதிகமாக உழைத் தவர்கள் பெரும்பாலும் அதிகாலையில் முழங்காலில் நின்றிருக்கிறார்கள். அதி காலை நேரத்தையும் அதின் புதிய வாய்ப் பையும் தேவனைத் தேடாமல் வேறு வேட்கைகளில் செல விடுகிறவர்கள் மீதி நேரத்தில் அவரைக் கண்டு பிடிப்பதில்லை.

அதிகாலையில் எழும்புவதும் ஜெபிப்பதும் நாம் தேவனைத் தேட நம்மை அதிகமாக உந்துகின்றன. காலையில் நிர்விசாரமாயிருப்பது நமது கவலையீனத் திற்கு அடையாளமாயிருக்கிறது. இவ் வாறு தேவனைத் தேடுவதில் பின்வாங்கி யிருக்கும் இருதயம் தேவன் மேலுள்ள சுவையை இழந்து விடுகின்றது.

தாவீதின் இருதயம் தேவனை வாஞ்சிக்கிறதாயிருந்தது. அவன் தேவனி டத்தில் வாஞ்சையும் தவனமுமாயிருந் தான். அவன் காலை வெளிச்சம் வருவ தற்கு முன்பாகவே அவரைத் தேடினான். தேவன் மேலுள்ள வாஞ்சையை அவனது படுக்கையும் தூக்கமும் கட்டுப்படுத்த வில்லை.

தேவன் மேலுள்ள வாஞ்சை தூக்கமாகிய சங்கிலியை உடைக்காம லிருப்பது பலவீனமானது. அதனால் நாம் தேவனுக்காக எந்த நன்மையையும் செய்ய முடியாமலாகி விடுகிறோம்.

கிறிஸ்து தேவனோடுள்ள உறவை வாஞ்சித்தார். எனவே அவர் அதி காலையில் இருட்டோடே எழுந்து மலை மேல் ஏறிச் சென்று ஜெபித்தார்.

அதிகாலையில் தேவனைத் தேடுகிற ஒரு சந்ததி எழும்ப வேண்டும். அதிகாலையின் புத்துணர்வும், பனித் துளிகள் போன்ற ஜெபமும் ஏறெடுக்கப் படும் போது பதிலாக புத்துணர்வையும், வல்லமையின் நிறைவையும், சந்தோஷத் தையும் பெலனையும் அந்நாள் முழுவ தற்கும் பெற்றுக் கொள்ளலாம்.

துணிந்து ஜெபிக்கிற ஒரு விசுவாசியின் மூலம் ஒரு பட்டணம் அல்லது தேசம் தேவனை அறிய முடியும். எலியா இத்தகைய ஜெபத்தை கர்மேல் பர்வதத்தில் ஏறெடுத்தான்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **ராஜபாளையம் சிற்றி A.G. சர்ச்**
PSK நகர், அழகிய நகர், சத்திரப்பட்டி ரோடு,
ராஜபாளையம் - 626 108 Mobile : **96006 11611**

நாள் : **10.06.2023,** 2-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்,** மொபைல் : 95432 21008

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

பூட்டிய எந்த ஒரு **ஜெப** அறையும் தேவனின் ஆசீர்வாதங்கள் குவித்திருக்கும் சேமிப்பு கிடங்கு.

தேவன் நம்மை நியாயந் தீர்ப்பதால் அவர் இரக்கமற்றவர் என்பது பொருளல்ல. நாம் மனந்திரும்பும் படியாகவே அவர் நம்மை நியாயந் தீர்க்கிறார்.

உங்கள் அர்ப்பணிப்பை முழுமைப்படுத்த உலகத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் நீங்கள் **வேறுபட** வேண்டும்.

தானியேல் பாபிலோன் தேசத்திலே **ஜெபித்தான்**. இப்படி எல்லோரும் ஜெபித்தால் தேசத்தில் எத்தனை பெரிய காரியங்கள் நடைபெற முடியும்?

துணிந்து **ஜெபிக்கிற** ஒரு விசுவாசியின் மூலம் ஒரு பட்டணம் அல்லது தேசம் தேவனை அறிய முடியும்.

மாறாத அன்பை பெற்றுக் கொள்ள கிறிஸ்துவின் வாஞ்சையை நிறைவேற்ற ஒவ்வொரு வினாடியும் **ஜெபிப்பதே** அதன் இரகசியம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason